**Tamil Chudar, Chennai, Aug 26 2008**

# டி.சி.எஸ்.: ஐ.டி.விஸ்.

நாட்டின் முன்னணி தகவல் தொடர்பு மற்றும் தொழில்துறை தீர்வுகளை வழங்கி வரும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் 'டி.சி.எஸ்.' நிறுவனம் சமீபத்தில் நடத்திய டி.சி.எஸ். 'ஐ.டி.விஸ்' போட்டிக்கு மாணவ, மாணவிகள் இடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.




நாட்டின் பள்ளிகளுக்கு இடையிலான தகவல் தொழில்நுட்ப வினாடி-வினா போட்டியின் 10-வது ஆண்டு நிறைவை நினைவுபடுத்தும் வகையில் சி.எஸ்.நிறுவன தலைமை செயல் அதிகாரி ராமதுரை wwwtcsitwiz.com என்ற பிரத்யேக இணையதளத்தை துவக்கி வைத்தார். 8 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகள் ஆரம்ப எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்று பிராந்திய இறுதி சுற்றுக்கு 6 அணிகள் தகுதி பெற்றன. புதுமையான முறையில் அமைந்த சுற்றுகள், பிக் ப்ரெய்ன் எனப்படும் பிரபல குவிஸ் மாஸ்டர் பால சுப்பிரமணியன் இப்போட்டியை நடத்தினார்.